**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 01/2022**

**வாதி தரப்பு சாட்சி–1 அம்பிகா திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வழக்கில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அரசு அதிகாரிகளுக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. யார் எனக்கு தொந்தரவு கொடுத்தார்கள் என்றால் மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர்கள் வந்து எனது பட்டா நிலத்தில் ரோடு போட வேண்டுமென சொன்னார்கள். பொதுவாக சாலை அமைப்பதற்கு மின் விளக்குகள் பராமரிப்பு, சாக்கடை அமைப்பது போன்றவை பஞ்சாயத்தார் தலைமையில் நடைபெறும் என்றால் சரிதான். பஞ்சாயத்து அலுவலர், நிர்வாக அலுவலர் வந்து ரோடு போட்டார்களா என்றால் அனைவரும் சேர்ந்து தான் ரோடு போட முயற்சி செய்தார்கள். தாவாவில் பிரச்சனைக்குரிய ரோடு தொடர்ச்சியாக பிரதான சாலையுடன் இணைகிறதா என்றால் ஆமாம்.

2) 1ம் பிரதிவாதி யார் என்றால் எனது நிலத்தை அடுத்து சட்டத்திற்கு புறம்பாக அவருடைய விவசாய நிலத்தில் வீடு கட்டி குடியிருப்பவர்கள். மேற்படி இடத்தில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 7,8 வீடுகள் இருக்கும். நான் சொல்வது தவறு என்றும் அங்கு சுமார் 100 குடும்பங்கள் வசிக்கிறார்கள் என்றும் அந்த இடத்திற்கு சுப்பன் ஆசாரி களம் என பெயர் என்றால் சுப்பன் ஆசாரி களம் என சொல்வார்கள். ஆனால் 100 குடும்பங்கள் இல்லை. ஆரம்ப காலத்தில் சுமார் 50 வருடமாக பெரியவர்கள் எந்த பிரச்சனையும் இல்லாமல் வசித்தார்கள். தற்போது இருக்கும் இளைஞர்கள் தான் எங்களுடன் பிரச்சனை செய்கிறார்கள்.

3) மேற்படி நபர்கள் தாவா 2ம் அயிட்ட சொத்தை தான் ரோடாக கடந்த 50 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் எங்கள் அனுமதியுடன் பயன்படுத்தி வந்தார்கள். மேற்படி பாதை மழைக்காலங்களில் மண் அரிப்பு ஏற்பட்டு குண்டும் குழியுமாக இருந்ததால் அங்கு வசிக்கும் நபர்கள் மேற்படி பாதையில் சாலை அமைத்து தர கோரிக்கை வைத்த விபரம் தெரியுமா என்றால் அதனால் தான் பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி சாலையில் மண் கொட்டி சமன் படுத்த வருவாய்த்துறையினர் வந்தார்களா என்றால் வந்தார்கள் நானே செய்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன். எனது பட்டா இடத்தில் இருந்த பாதைக்கு நானே மண் கொட்டி சமப்படுத்தி விட்டேன். அவரவர் பட்டா நிலத்தில் அவரவர்கள் செய்து விட்டார்கள்.

4) மேற்படி பாதை எத்தனை பட்டா நிலத்தின் வழியாக செல்கிறது என்றால் 7 நபர்களின் பட்டா நிலத்தின் வழியாக செல்கிறது. மேற்படி அனைவரும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் 5 பேர் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். என்னை தவிர மற்ற யாரும் வழக்கை நடத்தவில்லை என்றால் சரிதான். ஆசாரி களம் பகுதியில் வசிக்கும் நபர்கள் வறுமை கோட்டின் கீழ் உள்ளவர்கள் என்றால் இல்லை. வசதி படைத்த நபர்கள். ஆசாரி களத்தில் வசிப்பவர்கள் எனது சமூகத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. தாவா பி அயிட்ட சொத்தில் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் போது தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு எங்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான்.

5) நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் தாவா பி அயிட்ட சொத்து தனியாக பாதையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கு செல்ல நாங்கள் போட்டுக்கொண்ட பாதை. தாவா பி அயிட்ட சொத்தில் பஞ்சாயத்து குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு ஆசாரி களம் மக்களுக்கு நீர் கொண்டு செல்லப்படுகிறதா என்றால் இல்லை. தாவா பி அயிட்ட சொத்தில் பஞ்சாயத்து நிலமாக மின் கம்பங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலமாக தாவா பி அயிட்ட சொத்தை பார்வையிட்டால் மேற்படி அமைப்புகள் பற்றி உண்மை விபரம் தெரியும் என்றால் சரிதான். தற்போது ஆசாரி களம் பகுதியில் வசிப்பவர்கள் தாவா பி அயிட்ட சொத்தின் நடந்து செல்லவும், வண்டி வாகனங்கள் கொண்டு செல்லவும் எனக்கு ஏதாவது ஆட்சேபனை இருக்கிறாதா என்றால் இல்லை.

6) தாவா ஏ அயிட்ட சொத்தில் நான் பயிர் செய்யும் கரும்புகளை வண்டியில் ஏற்றி தாவா பி அயிட்ட சொத்தின் வழியாக சென்று தான் பிரதான சாலையை அடைய வேண்டுமென்றால் சரிதான். அவ்வாறு நான் மற்ற பட்டா நிலத்தின் பாதை வழியாக சென்று தான் பிரதான சாலையை அடைய வேண்டுமென்றால் சரிதான். இவ்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரை விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 8 ல் பிரதிவாதிகளின் பதிலுரையை பற்றி தெரியாமலேயே அது பொய் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனது வழக்கறிஞர் சொன்னார்.

7) தாவா பி அயிட்ட சொத்தானது சுமார் 60 வருடங்களுக்கு மேலாக பொது மக்கள் பயன்பாட்டில் பாதையாக இருந்து வருகிறது என்றும் அதை தடுக்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பொது மக்கள் பயன்படுத்துவது இல்லை. ஆசாரி களத்தில் வசிக்கும் ஒரு சமூகத்தினர் மட்டும் பயன்படுத்துகிறார்கள். தாவா பி அயிட்ட சொத்தின் வழியாக தான் பொது மக்களுக்கு குடிநீர் வசதி, மின் வசதி போன்றவை ஏற்படுத்தப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. தாவா பி அயிட்ட சொத்தை மருதூர் பஞ்சாயத்து மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. தாவா பி அயிட்ட சொத்தில் தார் சாலை அமைக்க எனக்கு ஆட்சேபனை இருந்ததா என்றால் எனது நிலத்திற்கான இழப்பீடை கொடுத்து விட்டு தார் சாலை அமைப்பதற்கு ஆட்சேபனை இல்லை. தாவா பி அயிட்ட சொத்து பொது மக்கள் பயன்படுத்தி வரும் பொது பாதை என்றும் அதில் தார் சாலை அமைப்பதை தடுக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தார் சாலை அமைத்தால் எங்களிடம் பிரச்சனை செய்வார்கள். இவ்வழக்கு 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**